II. நிகழ்நிலை (Online) பரீட்சை விண்ணப்படிவத்தை ஆங்கில மொழியில் மட்டுமே பூர்த்தி செய்தல் வேண்டும். விண்ணப்பதாரரினால் நிகழ்நிலையில் அனுப்பப்படும் விண்ணப்பப் படிவமானது திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது/ ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதை முறைமையில் குறிப்பிடப்படும் கையடக்கத் தொலைபேசிக்கு குறுந் தகவல் (SMS) மூலமாக அல்லது மின்னஞ்சல் (E-mail) முகவரிக்கு அறிவிக்கப்படும். நிகழ்நிலை விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்வதற்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு தயாரிக்கப்பட்டுள்ள அறிவுத்தலை (Instructions) பதிவிறக்கம் செய்து கொள்ளவும். விண்ணப்பத்தை நிரப்பும் போது அவ் அறிவுறுத்தல்களை கட்டாயமாக பின்பற்றுதல் வேண்டும். ஏற்கனவே அரசாங்க சேவையில்/ உள்நாட்டு அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் பரீட்சை விண்ணப்பப்படிவத்தின் பிரதி ஒன்றை தமது தனிப்பட்ட கோவையில் உள்ளடக்குவதற்கு உரிய அதிகாரிகளுக்கு வழங்குவதோடு, நேர்முகப் பரீட்சைக்கு தோற்றும் போது நிறுவனத் தலைவரினால் சான்றுறுதிப்படுத்தப்பட்ட பிரதி ஒன்றையும் சேவையை உறுதிப்படுத்தும் கடிதத்தையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

குறிப்பு :
பரீட்சை விண்ணப்பப்படிவத்தின் பிரதி ஒன்றை தமது தனிப்பட்ட கோவையில் உள்ளடக்குவதற்கு உரிய அதிகாரிகளுக்கு வழங்கப்படுவதோடு, நேர்முகப் பரீட்சைக்கு தோற்றும் போது நிறுவனத் தலைவரினால் சான்றுறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் பிரதி ஒன்றையும் சேவையை உறுதிப்படுத்தும் கடிதத்தையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

07. **பரீட்சை கட்டணங்கள் :**

பரீட்சைக் கட்டணம் ரூபா 600 ஆகும். இந்தக் கட்டணத்தை கொடுப்பனவு செய்கையில் நிகழ்நிலை முறைமையில் காணப்படும் பின்வரும் கட்டணக் கொடுப்பனவு முறைகளில் மட்டுமே கொடுப்பனவை மேற்கொள்ளுதல் வேண்டும்.

i. எந்தவொரு வங்கிக் கடன் அட்டை மூலமாக (Any Bank Credit Card)
ii. இணையத்தள கொடுப்பனவு வசதிகளுடன் எந்தவொரு வங்கியின் வரவு அட்டை மூலமாக (Any Bank Debit Card with the Facility of Internet Transactions)
iii. இலங்கை வங்கி நிகழ்நிலை வங்கி முறை (Online Banking Method of Bank of Ceylon)
iv. எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையின் மூலமாக (Any Branch of the Bank of Ceylon)

குறிப்பு :
(அ) மேற்குறிப்பிடப்பட்டுள்ள முறைகளின் மூலம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் விதம் தொடர்பான அறிவுறுத்தல்கள் இணையத்தளத்தில் பரீட்சைக்கான தொழில்நுட்ப அறிவுறுத்தல்களின் கீழ் வெளியிடப்பட்டுள்ளது.
(ஆ) கொடுப்பனவு கிடைக்கப்பட்டுள்ளது என்பதற்கு குறுந் தகவல் (SMS) மூலமாக அல்லது மின்னஞ்சல் (e-mail) முகவரிக்கு அறிவிக்கப்படும். பரீட்சை கட்டணத்தை முழுமையாக செலுத்துதல் வேண்டும். பரீட்சைக் கட்டணம் குறைவாகவோ அல்லது மேலதிகமாகவோ செலுத்தப்பட்டிருக்கும் விண்ணப்பப் படிவம் நிராகரிக்கப்படும். மேற்குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவு முறைகள் மூலம் பரீட்சைக் கட்டணங்களை செலுத்தும் போது ஏற்படும் தவறுகள் தொடர்பாக இலங்கை பரீட்சை திணைக்களம் பொறுப்பாக மாட்டாது.
(இ) எந்தவொரு காரணத்தினாலும் பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்பட மாட்டாது என்பதுடன் வேறு பரீட்சையொன்றுக்காக மாற்றுவதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது.

08. பின்வரும் ஆவணங்களில் ஒன்றையோ அல்லது எல்லாவற்றையுமோ கோரப்படுமிடத்து சமர்ப்பித்தல் வேண்டும்.

i. பிறப்பு அத்தாட்சிப்பத்திரம்
ii. கல்விச் சான்றிதழ்
iii. அண்மையில் பெற்றுக்கொண்ட கிராம அலுவலரின் சான்றிதழ்
iv. நற்சான்றிதழ்கள் இரண்டு
v. உரிய பிற சான்றிதழ்கள்

குறிப்பு – ஆவணங்கள்/ சான்றிதழ்கள் அல்லது இவற்றின் பிரதிகள் விண்ணப்பத்துடன் அனுப்பப்படலாகாது.

09. **பரீட்சை நிலையங்களும் அனுமதி அட்டைகளும் -**

I. பரீட்சையானது இந்த அட்டவணை 1 இல் காட்டப்பட்டுள்ள நகரங்களில் அமைக்கப்படவுள்ள பரீட்சை நிலையங்களில் நடாத்தப்படும் விண்ணப்பதாரிகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக எதிர்பார்க்கின்ற

